<u>செய்தி வெளியீடு</u>

**செ.வெ. எண்.110 /2019** **நாள். 07.08.2019**

# தமிழகத்தில் உள்ள மாநகராட்சிகளில் செயல்படுத்தப்பட்டு வரும் சீர்மிகு நகர திட்டங்களின் செயல்பாடுகள் குறித்து மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு எஸ்.பி.வேலுமணி அவர்கள் ஆய்வு

மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு. எஸ்.பி.வேலுமணி அவர்கள், தமிழகத்தில் பெருநகர சென்னை மாநகராட்சி உட்பட 11 மாநகராட்சிகளில் செயல்படுத்தி வரும் சீர்மிகு நகர திட்டங்கள் **(Smart City)** மற்றும் அட்டல் நகர்ப்புற புத்துணர்வு மற்றும் நகர்ப்புற மாற்றத்திற்கான திட்ட **(Amrut)** செயல்பாடுகள் குறித்து இன்று (7.8.2019) சென்னை, தலைமை செயலகத்தில் விரிவான ஆய்வு மேற்கொண்டார்.

**<u>சீர்மிகு நகர திட்டங்கள் (Smart City)</u>**

இந்தியா முழுவதும் 100 நகரங்களை தேர்ந்தெடுத்து, அதனை சீர்மிகு நகரங்களாக உருவாக்கும் திட்டத்தை, மத்திய அரசு செயல்படுத்த முனைந்த நேரத்தில், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் எடுத்த சீரிய முயற்சியின் காரணமாக, தமிழகத்தில் சென்னை, கோயம்புத்தூர், மதுரை, தஞ்சாவூர், சேலம், வேலூர், திருப்பூர், தூத்துக்குடி, திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி மற்றும் ஈரோடு ஆகிய 11 நகரங்கள், சீர்மிகு நகரங்களாக உருப்பெற தேர்ந்தெடுக்கப்பட்டன.

மத்திய அரசு இத்திட்டத்தின் கீழ், ஒவ்வொரு சீர்மகு நகரத்திற்கும் 500 கோடி ரூபாய் நிதியுதவி வழங்குகிறது. மத்திய அரசிற்கு இணையாக, தமிழக அரசும், 500 கோடி ரூபாய் நிதியுதவி வழங்குகிறது.

சீர்மிகு நகரத் திட்டத்திற்கு முதலாவது சுற்றில் 2015–16ஆம் ஆண்டில், பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் கோயம்பத்தூர் மாநகராட்சிகளும், 2வது சுற்றில், 2016–17ம் ஆண்டில், மதுரை, சேலம், தஞ்சாவூர் மற்றும் வேலூர் மாநகராட்சிகளும், 3ம் சுற்றில், 2017–18ம் ஆண்டில், திருச்சிராப்பள்ளி, திருப்பூர், திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாநகராட்சிகளும், 4ம் சுற்றில் 2017–18ம் ஆண்டில், ஈரோடு மாநகராட்சியும் தேர்வு செய்யப்பட்டன.

தமிழகத்தில், தேர்ந்தெடுக்கப்பட்ட 11 சீர்மிகு நகரங்களில், மொத்தம் ரூ.10554.75 கோடி மதிப்பீட்டில் 358 திட்டங்கள் மத்திய அரசினால் அனுமதிக்கப்பட்டுள்ளன.

**அனுமதிக்கப்பட்ட 358 திட்டங்களில்,**

- 54 திட்டங்கள் – ரூ.198 கோடியில் முடிக்கப்பட்டுள்ளன,
- 184 திட்டங்கள்– ரூ.5,352 கோடியில் நடைபெற்று வருகின்றன,
- 13 திட்டங்கள் – ரூ.605.20 கோடியில் ஒப்பந்தப்புள்ளிகள் கூராய்வு நிலை
- 18 திட்டங்கள் – ரூ.439 கோடியில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளன
- 15 திட்டங்கள் ரூ.625 கோடியில் ஒப்பந்தபுள்ளி கோரப்படவேண்டிய நிலையில் உள்ளன.
- 4 திட்டங்கள் ரூ.651 கோடியில் விரிவான திட்ட அறிக்கை கூராய்வு நிலை.
- 70 திட்டங்கள் ரூ.2,684 கோடியில் விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு வருகிறது.

இந்திய அளவில் 36 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் சீர்மிகு நகர திட்ட செயலாக்கத்தில் தமிழகம் 120.72 புள்ளிகளுடன் 7 வது இடத்தில் உள்ளது.

**அட்டல் நகர்ப்புற புத்துணர்வு மற்றும் நகர்ப்புற மாற்றத்திற்கான திட்டம் (AMRUT)**

தமிழகத்தில் பெருநகர சென்னை மாநகராட்சி உட்பட 28 உள்ளாட்சி அமைப்புகளில் செயல்படுத்தி வரும் அட்டல் நகர்ப்புற புத்துணர்வு மற்றும் நகர்ப்புற மாற்றத்திற்கான திட்டம் (AMRUT) செயல்படுத்தப்பட்டு வருகிறது.

குடிநீர் வசதி, கழிவு நீர் வசதி மற்றும் கழிவு நீர் கசடு அகற்றும் மேலாண்மை, மழைநீர் வடிகால் வசதி, நகர போக்குவரத்து வசதிகள் அமைத்தல், பசுமை மற்றும் திறந்தவெளி பகுதிகள் ஏற்படுத்துதல் போன்றவை உறுதி செய்வது இத்திட்டத்தின் நோக்கமாகும்.

இந்தியா முழுவதும் 500 நகரங்களை தேர்ந்தெடுத்து, இத்திட்டத்தை, மத்திய அரசு செயல்படுத்த முனைந்த நேரத்தில், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் எடுத்த சீரிய முயற்சியின் காரணமாக, தமிழகத்தில் பின்வரும் 12 மாநகராட்சிகள், 15 நகராட்சிகள் மற்றும் 1 பேரூராட்சி (28 நகரங்கள்) இத்திட்டத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. 1. பெருநகர சென்னை மாநகராட்சி, 2. கோயம்புத்தூர் மாநகராட்சி, 3. மதுரை மாநகராட்சி, 3. தஞ்சாவூர் மாநகராட்சி, 4.சேலம் மாநகராட்சி, 5. வேலூர் மாநகராட்சி, 6. திருப்பூர் மாநகராட்சி, 7.தூத்துக்குடி மாநகராட்சி, 8.திருநெல்வேலி மாநகராட்சி, 9.திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, 10. திண்டுக்கல்

மாநகராட்சி,

12. ஈரோடு மாநகராட்சி, 13. தாம்பரம் பெருநகராட்சி, 14. ஆவடி பெருநகராட்சி, 15.காஞ்சிபுரம் பெருநகராட்சி, 16. கடலூர் நகராட்சி, 17. திருவண்ணாமலை நகராட்சி, 18. கும்பகோணம் நகராட்சி, 19. இராஜபாளையம் நகராட்சி, 20. புதுக்கோட்டை நகராட்சி, 21. ஒசூர் நகராட்சி, 22. ஆம்பூர் நகராட்சி, 23. காரைக்குடி நகராட்சி, 24. நாகப்பட்டினம் நகராட்சி, 25.நாகர்கோவில் நகராட்சி, 26. பல்லவபுரம் நகராட்சி, 27. இராமேஸ்வரம் மற்றும் 28. வேளாங்கண்ணி பேரூராட்சி.

இத்திட்டத்தின் கீழ் மொத்தம் ரூ.11,441.32 கோடி மதிப்பீட்டிலான 445 திட்டங்கள் மத்திய அரசினால் அனுமதிக்கப்பட்டுள்ளன.

**அனுமதிக்கப்பட்ட 445 திட்டங்களில்,**

- **411 திட்டங்கள்** – ரூ.306 கோடியில் **முடிக்கப்பட்டுள்ளன**

(409 பூங்காக்கள் மேம்பாடு ரூ.232.38 கோடி, குடிநீர் திட்டப்பணி ரூ.48.14 கோடி, பாதாளச் சாக்கடை திட்டபணி ரூ.25.37 கோடி)

**30 திட்டங்கள்** – ரூ.8,625 கோடியில் – **நடைபெற்று வருகின்றன.**

(ரூ.4,778 கோடியில் – 15 பெரிய குடிநீர்த் திட்டப் பணிகள், ரூ.3,847 கோடியில் – 15 பாதாள சாக்கடைத் திட்டப் பணிகள்)

- **3 பெரிய திட்டங்கள்** – ரூ.2,246 கோடி மதிப்பீடு – **ஒப்பந்தப்புள்ளி நிலையில் உள்ளன**

(இதில், ரூ.1,669 கோடியில் 2 பெரிய குடிநீர்த் திட்டப் பணிகள், ரூ.577 கோடியில் 1 பாதாள சாக்கடைத் திட்டப் பணி)

- **1 திட்டம்** – ரூ.264.12 கோடி *பாதாள சாக்கடை திட்டம்*– **மறுஒப்பந்தப்புள்ளி நிலையில் உள்ளன**

இந்திய அளவில் அம்ரூத் திட்ட செயலாக்கத்தில் தமிழகம் 49.20 புள்ளிகளுடன் 13வது இடத்தில் உள்ளது.

மேற்படி இரண்டு திட்டங்களையும் மாநகராட்சி வாரியாகவும், நகராட்சி வாரியாகவும் விரிவான ஆய்வு செய்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடைபெற்று வரும் பணிகளை, குறிப்பிட்ட காலவரையில் முடிக்கப்பட வேண்டும் எனவும், ஒப்பந்தப்புள்ளி கூராய்வில் உள்ள இனங்களை விரைவுபடுத்தி, பணிகள் துவங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும், ஒப்பந்தப்புள்ளி கோரப்படும் நிலையில் உள்ள அனைத்து திட்டங்களும் 30.09.2019க்குள் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட வேண்டும் என அறிவுறுத்தினார்கள்.

மேலும், நிலுவையில் உள்ள திட்டங்களுக்கு, விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணியை விரைந்து முடித்து 01.10.2019க்குள் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட வேண்டும் எனவும், அனைத்து திட்டங்களையும் உயர் அலுவலர்கள் அடிக்கடி ஆய்வு செய்து திட்டங்களின் தரத்தினை உறுதி செய்ய வேண்டும்.

பணிகள் அமல்படுத்துவதில் ஏதேனும் நடைமுறைச் சிக்கல்கள் இருப்பின் உடனுக்குடன் நகராட்சி நிர்வாக ஆணையர்/அரசு முதன்மை செயலர் கவனத்திற்கு கொண்டு வர வேண்டும் என மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அலுவலர்களுக்கு தெரிவித்து, திட்டம் அறிவித்த நாளில் இருந்து 5 வருடங்களுக்குள் பணிகள் முடிக்கப்பட வேண்டும் என்பதனைக் கவனத்தில் கொண்டு அனைத்து அலுவலர்களும் செயல்பட வேண்டும் என அறிவுரை வழங்கினார்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு முதன்மை செயலாளர் திரு.ஹர்மந்தர் சிங், இ.ஆ.ப., நகராட்சி நிர்வாக ஆணையர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரிய மேலாண்மை இயக்குநர் திரு.த.ந.ஹரிஹரன், இ.ஆ.ப., தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவன மேலாண்மை இயக்குநர் திருமதி காகர்லா உஷா, இ.ஆ.ப., பேரூராட்சிகளின் இயக்குநர் திரு.எஸ்.பழனிச்சாமி, இ.ஆ.ப., தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் மகேஸ்வரன், இ.ஆ.ப., சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரிய செயல் இயக்குநர் திரு.த.பிரபுசங்கர், இ.ஆ.ப., பெருநகர சென்னை மாநகராட்சி துணை ஆணையாளர் (பணிகள்) திரு.எம்.கோவிந்த ராவ், இ.ஆ.ப., நகராட்சி நிர்வாக இணை ஆணையாளர் திருமதி கலைச்செல்வி மோகன், இ.ஆ.ப., பெருநகர சென்னை மாநகராட்சியின் முதன்மை தலைமைப் பொறியாளர் திரு.எம்.புகழேந்தி, தலைமைப் பொறியாளர் திரு.எல்.நந்தகுமார், கண்காணிப்பு பொறியாளர்கள், அனைத்து மாநகராட்சி ஆணையர்கள் மற்றும் நகரப் பொறியாளர்கள் நகராட்சி நிர்வாக ஆணையரக கூடுதல் இயக்குநர்கள், தலைமைப் பொறியாளர் மற்றும் கண்காணிப்பு பொறியாளர், நகராட்சி ஆணையர்கள் மற்றும் நகரப் பொறியாளர்கள் சென்னை குடிநீர் வாரியம் மற்றும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய பொறியியல் இயக்குநர் மற்றும் தலைமைப் பொறியாளர்கள், கண்காணிப்பு பொறியாளர்கள், பேரூராட்சிகளின் இணை இயக்குநர் மற்றும் கண்காணிப்பு பொறியாளர்கள் உள்ளிட்ட அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்**

**பெருநகர சென்னை மாநகராட்சி**